## தமிழ்நாடு முழுவதும் 10 ஆயிரம் பேர்கள் பங்கேற்றனர்:

# த.வெ.க. அரசைக் கண்டித்து மின் கழக தொ.மு.ச.வினர் கண்டன ஆர்ப்பாட்டம்!

சென்னை, செப்.12-

தொழிலாளர்களின் விரோத த.வெ.க. அரசை கண்டித்து தமிழ்நாடு மின் கழகத் தொமுச சார்பாக தமிழ்நாடு முழுவதும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முழுவது முள்ள மின்வாரிய மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் முன்பு மற்றும் மின்வாரிய தலைமை அலுவலகம் முன்பு மின்கழகத் தொமுசவினர், மின்வாரியம் தனியார்மயமாவதை கைவிட வலியுறுத்தியும், ஒப்பந்தத் தொழிலாளர்களை அடையாளம் கண்டு பணி நிரந்தரம் , விடுபட்ட கேங்மேன் பணிநிரந்தரம் என பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 11.09.2026 மாலை 5.20 மணியளவில் தவெக அரசை எதிர்த்து மாநிலம் முழுவதும் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

சென்னையில் மின்வாரிய தலைமை அலுவலகம் முன்பு மின்கழகத் தொமுச பொதுச்செயலாளர் பா.மணிமாறன் தலைமையில் 11.09.2026 மாலை 5.20 மணியளவில், தொமுச பேரவைச்செயலாளர் தனசேகரன் முன்னிலையில் சென்னை, அனைத்துத் திட்டச்சங்க நிர்வாகிகள் / உறுப்பினர்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் என 1000 பேர்கள் எழுச்சியுடன் கலந்துக்கொண்டனர்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மின்கழகத் தொமுச பொதுச் செயலாளர் பா.மணிமாறன் பேசும் போது, திராவிட மாடல், கழகத்தலைவர் அன்புத்தளபதி அவர்களின் அரசு தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கும் அரசாக இருந்தது. மின்வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பல சலுகைகள் பெற்றுத்தந்தது.

2021-2026 ஐந்து ஆண்டுகளில் வரலாற்றுச் சிறப்பு மிக்க 2 ஊதிய உயர்வுகளை மின்வாரிய பணியாளர்களுக்கு வழங்கியது. பணிபுரிகிறவர்கள் மற்றும் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களும், பாதுகாப்பை உறுதிசெய்தும், பெற்று வந்த சலுகைகளை பாதிக்காத வண்ணம் 13 ஆண்டுகள் கிடப்பில் இருந்த முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தார்கள். அதிமுக ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஈட்டிய விடுப்பை காசாக்கிக்கொள்ள அனுமதி அளித்தார்கள். உடனுக்குடன் அகவிலைப்படி உயர்வு, கருணைத்தொகையுடன் தீபாவளி போனஸ், பொங்கல் பரிசு உள்ளிட்ட பல சலுகைகளை வழங்கி மின்வாரியத்தில் பணிபுரிகிறவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தினார்கள்.

புதியதாக பொறுப்பேற்ற இந்த தவெக அரசு 10,000 தொழிலாளர்கள் 5 ஆண்டுகளுக்கு தற்காலிகமாக பணியில் எடுக்க உத்தரவு வழங்கி, தற்போது மின்வாரியத்தில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களை வஞ்சிப்பது நியாயம் ஆகாது. பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உடனே பணி வழங்க வேண்டும்.

பணியாளர்களின் பற்றாக்குறையால், கூடுதலாக பணிச்சுமையில் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிப்புள்ளாகியிருக்கும் தொழிலாளர்களின் பணிச்சுமையை குறைக்க காலிப் பணியிடங்களை உடனே நிரப்பிட வேண்டும்.

அதே போல கேங்மேன் தொழிலாளர்களுக்கு களப்பணி உதவியாளராக பதவிமாற்றம் வழங்கிட வேண்டும், விடுப்பட்ட கேங்மேன் தொழிலாளர்களுக்கு பணி வழங்க வேண்டும் என பல கோரிக்கைகள் வலியுறுத்தி தவெக அரசை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தினார்கள்.

தவெக அரசின் தொழிலாளர் எதிர்ப்பு நிலையை தொடர்ந்தால் மாநில முழுவதும் போராட்டம் விரிவுபடுத்தப்படும் என்று கூறினார்.

## தமிழறிஞர் சாலமன் பாப்பையா மறைவு!

# பட்டிமன்றத் தமிழ் முடிந்து விட்டதா?



சாலமன் பாப்பையாவின் மறைவு
உள்ளத்தை உடைக்கிறது

பாரதி மறைந்தநாளில்
பாப்பையாவும்
மறைந்திருக்கிறார்

செப்டம்பர் 11
தமிழுக்கு நல்லநாள்
இல்லை போலும்

பட்டிமன்றத் தமிழ்
முடிந்துவிட்டதா?
பாமரத் தமிழ்
மூச்சை
நிறுத்திக்கொண்டதா?

கல்லூரிகளில்
பயிற்றுவித்த தமிழைக்
கடைவீதிக்குக்
கொண்டுசேர்த்தவர்
சாலமன் பாப்பையா

இந்தக் குளத்தில்
கல்லெறிந்தவர்கள் நூலில்
அவர்குறித்தும் எழுதியிருக்கிறேன்

சிரிக்க வைத்துச்
சிந்திக்கவும் வைத்த
மேடைக் கலைவாணர்
மறைந்துவிட்டார்

அவரது நாற்காலி
காலியாகவே இருக்கும்;
நிரப்ப முடியாது

மதுரைக்கே
ஒரு வெறுமை வந்துவிட்டது;
மனம் கலங்குகிறது


அவரை இழந்து வாடும்
குடும்பத்தார்க்கும்
உலகத் தமிழர்களுக்கும்
ஆழ்ந்த இரங்கல்

கவிப்பேரரசு
வைரமுத்து



# செப்டம்பர்-15 சென்னையில் கழகத்தின் முப்பெரும் விழா!

## "திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க.வினர் அணிதிரள்வோம்! ஆர்ப்பரிப்போம் தலைநகர் நோக்கி!" முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!



திருவண்ணாமலை, செப். 12 -

செப்டம்பர் 15 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழகத்தின் முப்பெரும் விழா நடைபெறவுள்ளது. திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், சென்னையை நோக்கி அணித்திரள்வோம், ஆர்ப்பரிப்போம் என்று முன்னாள் அமைச்சரும், கழகத்தின் கொறடாவுமான எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து, அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்த ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளாம் **செப்டம்பர் 15**,

பண்பாட்டுத் துறையில் பகுத்தறிவு, சமத்துவம், பொருளாதாரத் துறையில் சமதர்மம், அரசியலில் ஜனநாயகம் என்ற கோட்பாட்டுடன், அடுத்த தேர்தலை அல்ல, அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திக்கின்ற இயக்கமாம், பவள விழாக் கண்ட திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நாள் **செப்டம்பர் 16**,

பாராட்டி போற்றி வந்த பழமைலோகம், ஈரோட்டு பூகம்பத்தால் இடியுதுபார் என்று தலைவர் கலைஞரால் கொண்டாடப்பட்ட, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளாம் **செப்டம்பர் 17**,

ஆக இவை மூன்றையும் கழகம் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவாக கொண்டாடி வருகிறது. விழாவில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது, பாவேந்தர் விருது, பேராசிரியர் விருது, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பெயரில் விருதுகள் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு செப்டம்பர் 15 செவ்வாய் அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழகத்தின் முப்பெரும் விழா நடை பெறவுள்ளது. **கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணையை ஏற்று**, திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அணி சார்ந்த அமைப்பின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள், சென்னை, அண்ணா அறிவாலயம் நோக்கி அணித் திரள்வோம், ஆர்ப்பரிப்போம்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கூறியுள்ளார்.

## மதுராந்தகம் – தாராபுரத்தில் இடைத்தேர்தல்:

# தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களுக்கு தமிழ் மாநில தேசிய லீக் ஆதரவு!

## திருப்பூர் அல்தாப் அறிக்கை!


சென்னை, செப்.12-

மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க.விற்கு தமிழ் மாநில தேசிய லீக் ஆதரவு என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

தமிழகத்தில் நடைபெற உள்ள இடைத்தேர்தலில், மதச்சார்பின்மை, சமூகநீதி மற்றும் தமிழகத்தின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் செயல்பட்டு வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணிக்கு, தமிழ் மாநில தேசிய லீக் முழு ஆதரவை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு மேனாள் முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி, சிறுபான்மையினர் நலன், கல்வி, சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை உறுதி செய்து வந்துள்ளது. எனவே, இந்நிலை



வலுப்பெற இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய தமிழ் மாநில தேசிய லீக் நிர்வாகிகள்

ஜி.சம்சுதீன், ஹாஜா நஜ்முதீன், திருவான்மியூர் ஹாஜா,அல்லாபகஷ் மற்றும் தொண்டர்கள் எனது தலைமையில் பாடுபடுவார்கள்.

தி.மு.க. வேட்பாளருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்யுமாறு வாக்காள பெருமக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், செப். 12 -

கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (12.09.2026 - சனிக்கிழமை) மாலை 3.00 மணியளவில், காட்டுமன்னார்கோவில், எம்.ஆர்.கே. கலையரங்கத்தில் கழக தேர்தல் பணிக்குழுச் செயலாளர் இள. புகழேந்தி தலைமையிலும்,



தலைமைக் கழக பிரதிநிதிகள் கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி மற்றும் கழக அயலக அணி துணைச் செயலாளர் ப.பரிதி இளம்சுருதி ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட காட்டுமன்னார்கோவில், சிதம்பரம், புவனகிரி, குறிஞ்சிப்பாடி, கடலூர் ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:**

1. 22.8.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில், கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின் படி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக மறுசீரமைப்பு குறித்து.

2. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெ.சு. திருவேங்கடம்

### செப்டம்பர் 12 (2022)



1954ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்ற தொடங்கி கிளாம்பாடி கிளைச் செயலாளராகி, அதனைத் தொடர்ந்து ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், சட்டதிட்டக்குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், சொத்துப் பாதுகாப்புக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் செயலாளர், தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றியக்குழு துணைத் தலைவர், ஒன்றியக்குழு தலைவர், நான்கு முறை கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என பல பொறுப்புகள் வகித்து, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

2017ஆம் ஆண்டு திண்டுக்கல்லில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் அவர்கள் திருக்கரங்களால் "அண்ணா விருது" பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## முதலமைச்சரின் ஆணவப் பேச்சு! இன்று

# இராணிப்பேட்டையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை. செப். 12-

இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் விஜயின் ஆணவப் பேச்சை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் இன்று (12.09.2026 சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு இராணிப்



பேட்டை முத்துக்கடை அருகில் இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில் எனது (ஆர்.காந்தி) தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுபினர்கள் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கழகத் தோழர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் இளைஞர்கள் மாணவர்கள் வியாபார பெருமக்கள் விவசாயிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தினை வெற்றி பெற செய்ய வேண்டும் என அன்போடு கேட்டுக் கொள்கிறேன்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## முதலமைச்சரின் ஆணவப் பேச்சை கண்டித்து இன்று

# நாமக்கல் மாவட்ட தி.மு.க. சார்பில் - ஒருங்கிணைந்த ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி. - கே.எஸ்.மூர்த்தி கூட்டறிக்கை!

நாமக்கல், செப். 12 –

நாமக்கல் கிழக்கு – மேற்கு மாவட்டச் செயலாளர்கள் கே.ஆர். என்.இராஜேஷ்குமார், கே.எஸ். மூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:





ஆட்சியின் தோல்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் தப்பித்துக் கொள்ள கொச்சையான பேச்சுகளை பேசும் தரம் அற்ற மனிதராக முதலமைச்சர் விஜய் மாறியிருக்கிறார் என கண்டனம் தெரிவித்துள்ள தி.மு.க. தலைமை கழகம் அவரது பேச்சை கண்டித்து தமிழக முழுவதும் வருவாய் மாவட்ட தலைநகரங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த அறிவித்துள்ளது. அதன்படி இன்று (12.09.2026 – சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் நாமக்கல் பூங்கா சாலையில் நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி, நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் கே.எஸ்.மூர்த்தி ஆகியோர் தலைமையில் நடைபெற இருக்கிறது.

எனவே இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு, மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய,நகரப், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள், என அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி, நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் கே.எஸ்.மூர்த்தி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.